මහජන බැංකුව | மக்கள் வங்கி

PEOPLE'S BANK

# கேள்விப்பத்திர அறிவித்தல்.

முதலுதவி தீயணைப்பு உபகரணங்களை சேவை செய்யும் மற்றும் பராமரிக்கும் நடவடிக்கைகளை இரண்டு வருடங்களுக்கு மேற்கொள்ளுவதற்காக தீயணைப்பு சேவை திணைக்களத்தில் பதிவுசெய்துள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.

| கேள்விப்பத்திர இலக்கம் | பொருள் பற்றிய விபரம் | விலைகூறல் பிணைப்பொறுப்பு முறியின் பெறுமதி (ரூ) | கேள்விப்பத்திரம் வழங்கப்படும் இறுதி திகதியும் நேரமும் | கேள்விப்பத்திரம் மூடப்படும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| P-090/2025 | தீயணைப்பு உபகரணங்களை சேவை செய்யும் மற்றும் பராமரிக்கும் பணிகள் (இரண்டு வருடங்களுக்காக) (Fire Extinguishers) | 250,000/- | 2025.11.12ஆம் திகதி பி.ப.2.00 மணி | 2025.11.13ஆம் திகதி பி.ப.2.00 மணி |

1. கேள்விப்பத்திர விண்ணப்பங்களை 2025.10.21ஆம் திகதி முதல் 2025.11.12ஆம் திகதி வரை வாரத்தில் வேலை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 2.00 மணி வரை இல: 30/101, கிவ் வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் வழங்கல் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். ஒரு கேள்விப்பத்திரத்திற்காக ரூபா 5,000/- மீளச் செலுத்தப்படாத கேள்விப்பத்திர வைப்புத் தொகையொன்றைச் செலுத்த வேண்டும். கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்காக தமது நிறுவனத்தின் கோரிக்கை கடிதமொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

2. முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்களை மக்கள் வங்கி, வழங்கல் திணைக்களம், 30/101, கிவ் வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இட வேண்டும். இன்றேல் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் மேற் குறிப்பிட்ட திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியன்று பிற்பகல் 2.00 மணியின் பின்னர் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படாமலே மீள ஒப்படைக்கப்படும்.

3. ஒழுங்காகத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரத்துடன் ரூபா 250,000/- பெறுமதிக்கு விலைகூறல் பிணைப்பொறுப்பு முறியொன்றை ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும். அது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 180 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருக்க வேண்டும். இதற்காக 180 நாட்களுக்குச் செல்லுபடியான வங்கி கொடுப்பனவு கட்டளைகளை அல்லது வங்கி வரைவுகளைச் சமர்ப்பிக்க முடியும். தனிப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மக்கள் வங்கியில் எந்தவொரு விதத்திலான கணக்கொன்றில் பண வடிவில் உள்ள வைப்புத் தொகை மற்றும் அதற்கு உரியதாக எதிரீடு செய்யும் கடிதமாக இருந்தாலும் பிணைப்பொறுப்பு முறியாக ஏற்றுக்கொள்ள முடியும்.

4. அனைத்து அல்லது எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது கேள்விப்பத்திரத்தை இரத்துச்செய்யும் அல்லது எவ்வித காரணமும் காட்டாமல் கேள்விப்பத்திரமொன்றின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளும் உரிமை மக்கள் வங்கிக்கு உண்டு. ஆகக் குறைந்த விலையை ஏற்றுக்கொள்ள வங்கி கட்டுப்பட்டிருக்கவில்லை.

5. இது தொடர்பான மேலதிக விபரங்களை கீழுள்ள தொலைபேசி இலக்கங்கள் ஊடாக பிரதம முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**முகாமையாளர் (வழங்கல்)**
**மக்கள் வங்கி,**
**வழங்கல் திணைக்களம்**
**30/101, கிவ் வீதி, கொழும்பு 02.**

**தொலைபேசி இலக்கம்** : 2439577 - 8
**தொலைநகல் இலக்கம்** : 2439576
**இணையத்தளம்** : www.peoplesbank.lk
**மின்னஞ்சல்** : supplies@peoplesbank.lk